**(vi)** **(அ) பத்துக் கட்டளைகளில் வாக்குத்தத்தத்துடன் கூடிய ஓர் கற்பனை எத்தனையாவது கற்பனையாகக் காணப்படுகிறது?**

***விடை :*** ஐந்தாம் கற்பனை

**(ஆ) இக் கற்பனையை எழுதுக.**

***விடை :*** உன் தந்தையையும் தாயையும் மதித்து நட. அப்போது உன் கடவுள் உனக்குக் கொடுக்கிற நாட்டில் உன் நாட்கள் நீடித்திருக்கும்.

**(vii)** ''இதோ என் தூதனை அனுப்புகிறேன். அவர் **எனக்கு முன்** உமது வழியை ஆயத்தஞ் செய்வார்.''

**(அ) இதனை உரைத்த இறைவாக்கினர் யார்?**

***விடை :*** இறைவாக்கினர் மலாக்கி

**(ஆ) தடித்த எழுத்தில் உள்ள வார்த்தைகளை விளக்குக.**

***விடை :*** திருமுழுக்கு யோவான் ஆண்டவருக்கு முன்பாக சென்று, இறையரசை ஏற்றுக்கொள்வதற்கு மக்களின் மனங்களை ஆயத்தம் செய்தல்.

**(viii)** **(அ) இயேசுவானவர் நிறைவு செய்த புதிய உடன்படிக்கை என்ன?**

***விடை :*** இயேசுவானவர் தமது சரீரத்தையும், இரத்தத்தையும் சிந்தி சிலுவையில் மரித்து எமது பாவ மன்னிப்புக்காக செய்ததே புதிய உடன்படிக்கை.

**(ஆ) இவ்வுடன்படிக்கையை எப்போது ஏற்படுத்தினார்?**

***விடை :*** இதை ஏற்படுத்தியது தனது சீடர்களோடு பாஸ்கா விழாவைக் கொண்டாடிய இறுதி இரா உணவின் போது அப்பத்தைப்பிட்டு திராட்சை இரசத்தைக் கொடுத்து அடையாளப்படுத்தினார்.

**(ix)** **(அ) தனது வினாக்களுக்கு விடை தேடி, இரவில் இயேசுவைக் காணவந்த யூதத் தலைவர் யார்?**

***விடை :*** நிக்கதேமு

**(ஆ) இயேசுவின் விடையில் இருந்து நாம் கற்பது என்ன?**

***விடை :*** வாழ்வில் வெளிப்படையாக மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல், இயேசுவை அன்பு செய்து அவரை உறுதியோடு பற்றிக் கொண்டு புது வாழ்வு வாழுதல்.

**(x)** **இயேசுவானவரின் உன்னத நற்செய்தியான மன்னிப்பை தம் வாழ்வில் அனுபவித்தமையால் அண்மைக் காலத்தில் சிறைக்கூடத்திற்குச் சென்று, தமக்கு குற்றம் இழைத்தவர்களுக்கு மன்னிப்பு வழங்கிய இரு கிறிஸ்தவ குருமார் யாவர்?**

- இரண்டாம் ஜுவாம் பவுல்
- அருட்பணி. பீற்றர் ஜெராட் டி சில்வா

**(2x10 = 20 புள்ளிகள்)**

**02.** **(i)** **(அ) ''நீரும் போய் அப்படியே செய்யும்'' இயேசுவானவர் இதனை யாருக்குக் கூறினார்?**

**(ஆ) இதனை எந்த நிகழ்வின் பின்னணியில் கூறினார்?**

**(ii)** **(அ) அவர்கள் இதனை விளக்குவதற்கு இயேசுவானவர் கூறிய உவமையில் வரும் மூன்று கதாப்பாத்திரங்களும் யாவை?**

**(ஆ) அந்நிகழ்விற்கு எவ்வாறான மாறுத்தரம் காட்டினர்?**

**(iii)** **இங்கு காணும் நல்ல கதாப்பாத்திரத்தின் மூலம் வெளிப்படும், நமது வாழ்விற்கு உதவக்கூடிய, ஐந்து குணாதிசயங்கள் யாவை?**

***விடை:***

(i) (அ) இயேசுவிடம் வந்த திருச்சட்ட அறிஞருக்கு கூறினார்.
(ஆ) எனக்கு அடுத்திருப்பவர் யார்? என்று இயேசுவிடம் கேட்டபோது

(ii) (அ) – குரு
- லேவியர்
- சமாரியர்

(ஆ) **குரு** – விழுந்து கிடந்த மனிதனைக் கண்டு பாதையின் மறுபக்கமாக விலகிச் சென்றார்.
**லேவியர்** - மறுபக்கமாக விலகிச் சென்றார்.
**சமாரியர்** - விழுந்து கிடந்த மனிதனைக் கண்டு, அவர் மீது பரிவு கொண்டு, காயங்களில் திராட்சை இரசம் மற்றும் எண்ணெயும் வார்த்துக் கட்டி, பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி ஒரு சாவடிக்கு சென்றார். அங்கே பணத்தையும் கொடுத்து மேலதிகமாக செலவானால் மீண்டும் வரும்போது தருதாகக் கூறி அம்மனிதனை பராமரித்துக் கொள்ளச் செய்தார்.

(iii)
- இன, மத பேதமின்றி தேவையான சந்தர்ப்பத்தில் உதவி செய்தல்.
- தனது காலத்தையும், நேரத்தையும் பிறருக்காக அர்ப்பணித்தல்
- பணம் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அயலவருடன் பகிர்ந்து கொள்ளுதல்.
- தெருவில் காயமுற்றோரை வாகனத்தில் ஏற்றி உதவுதல்.
- சமாரியர் தன்னிடமுள்ள அனைத்தையும் அர்ப்பணித்தமை போன்று எமக்குள்ள செல்வங்களையும் பிறர் நலனுக்காக அர்ப்பணித்தல்

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

**03.** **“யூத சமயத்தின் முக்கிய சமயக் குழுக்கள் இயேசுவானவருடன் உரையாடல்களை மேற்கொண்டன.”**

**(i)** **(அ) இக்குழுக்கள் இரண்டின் பெயர்களைத் தருக.**

**(ஆ) இவை எந்த சமய நிலையங்களை தமது மையத்தளங்களாகக் கொண்டிருக்கின்றன?**

**(ii)** **இக்குழுக்களினால் இயேசுவுக்கு முன்வைக்கப்பட்ட பின்வரும் சவால்களுக்கு அவரின் மாறுத்தரங்கள் என்ன?**
**(அ) பாவிகளோடு உறவு கொள்ளல்**
**(ஆ) ஓய்வு நாளில் குணமளித்தல்**
**(இ) உயிர்த்தெழுதல் பற்றிய வினா**

**(iii)** **அந்த உரையாடல்களுக்கு இயேசுவானவரின் மாறுத்தரங்களில் இருந்து, இன்று நம் வாழ்வில் பின்பற்றக் கூடிய முன்மாதிரிகள் யாவை?**

***விடை:***

(i) (அ) பரிசேயர், சதுசேயர்

(ஆ) பரிசேயர் - சினக்கோக்
சதுசேயர் - எருசலேம் தேவாலயம்

(ii) **(அ)** பாவிகளோடு உறவு கொள்ளல்
இயேசுவின் மாறுத்தரமானது நோயற்றவர்களுக்கு அல்ல, நோயுற்றவர்களுக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்.

**(ஆ)** ஓய்வு நாளில் குணமளித்தல்
ஓய்வு நாளில் நாம் செய்ய வேண்டியது நன்மையா, தீமையா? உயிரைக் காப்பதா, அழிப்பதா? எது முறை? (லூக்கா 13 : 14)

**(இ)** உயிாத்தெழுதல் பற்றிய வினா
திருமணம் செய்து கொள்வதில்லை, இனி அவர்கள் சாக முடியாது. அவர்கள் வானதூதரைப் போல் இருப்பார்கள் என்றார்.

(iii)
- வழிவிலகிச் சென்றவர்களைத் திடப்படுத்தி, அவர்கள் நல்வழிக்கு வருவதற்கு உதவுதல்.
- சட்டத்திற்கு மேலாக மனித மாண்பு மேலானது என்பதை ஏற்றுக்கொள்ளல்.
- ஓய்வு நாள்/ ஞாயிற்றுக்கிழமைகளில் நல்லவை செய்தல்.
- சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கு கருணை காட்டுதல்.
- உயிர்த்தெழுதல் உண்டெனவும், அதற்கான வரத்தைப் பெற்றுக்கொள்வதும் முக்கியமாகும்.

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

**04. “இயேசுவானவர் சிறந்த ஆசிரியர் ஆவார்”**

**(i) இறையரசின் ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இயேசுவானவர் கைக்கொண்ட இரு வழிமுறைகளைப் பெயரிடுக.**

**(ii) சமவெளிப் பொழிவில் இயேசுவானவர் கூறிய ‘பேறு’ தரும் ஆசீர்வாத வசனங்களை நிறைவு செய்க.**

**(அ) “ஏழைகளே நீங்கள் பேறு பெற்றோர், ஏனெனில் .................”**

**(ஆ) “பட்டினியாய் இருப்போரே நீங்கள் பேறு பெற்றோர், ஏனெனில் ...............”**

**(இ) “அழுது கொண்டிருப்போரே நீங்கள் பேறு பெற்றோர், ஏனெனில் ...........”**

**(iii) மேற்கூறியவற்றில் காணப்படுபவற்றில் இருந்து நாம் தினசரி வாழ்வில் பின்பற்றக்கூடிய ஆன்மீக உண்மைகள் யாவை?**

***விடை:***

(i)
- அரமேய மொழியைப் பயன்படுத்தி போதித்தமை.
- உவமைக் கதைகள் (தினசரி வாழ்வில் மக்கள் பார்த்து கேட்டு அனுபவித்த சம்பவங்கள்)
- இயேசுவின் முன்மாதிரியான வாழ்வு

(இவற்றில் இரண்டு)

(இ) **பிலிப்பி** – குறி சொல்லும் ஆவியைக் கொண்ட பெண் நலமடைதல். இதனால் அவர்களை குற்றம் சாட்டி, அடித்து சிறையிலடைத்தல். சிறையில் கடவுளை புகழ்ந்து பாடுதல். நிலநடுக்கத்தால் அனைவரின் விலங்குகளும் கழன்றன. ஆனால் அவர்கள் தப்பித்துச் செல்லவில்லை. சிறைக்காவலரும் குடும்பத்தாரும் திருமுழுக்கு பெறுதல். அவர்களை இரகசியமாக வெளியேறுமாறு கேட்டும், நீதிக்கு முரணாக செயற்படாமல் பகிரங்கமாக அனைவர் முன்னிலையிலும் விடுதலை செய்யுமாறு கூறுதல்.

(ஈ) **எதென்ஸ்** - சிலைகள் நிறைந்த நகரம். ஏப்பிக்கூரர், ஸ்தோயிக்கர் ஆகிய மெய்யியல் அறிஞர்களோடு பவுல் கலந்துரையாடினார். அறியாத தெய்வத்துக்கு என்ற பலிபீடத்தை கண்டு தனது போதனையை முன்வைத்தார். தியோனிசியுவும், தாமரி என்னும் பெண்ணும் இயேசுவை ஏற்றனர்.

(iii)
- ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திடமாக கடவுளுக்கு முன்பாக தைரியமாக செயல்படுதல்.
- தலைமைத்துவத்தை கூட்டுத்தலைமைத்துவமாக ஏற்று செயற்படுதல்.
- தூய ஆவியானவரின் வழிகாட்டுதலோடு செயல்படுதல்.
- சுய இலாபம் கருதாமல் கடவுளுக்கு ஏற்ற மகிமையையும், கௌரவத்தையும் கொடுத்தல்.
- போதனைகள் மூலமாகவும், செயல்கள் மூலமாகவும் உயிர்த்த இயேசுவானவர் குறித்து சான்று பகருதல்.
- மாய வித்தைகள், சிலை வழிபாடு போன்ற பயனற்ற செயற்பாடுகளை விளக்கிக் கூறி நற்செய்தியைப் பரப்புதல், சூழலுக்கேற்றவாறு ஞானத்தோடு செயற்படுதல்.

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

**06. “உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ, அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்”**

**(i) உலக செல்வத்தின் தீமைகளை வெளிப்படுத்துவதற்கு இயேசுவானவர் கூறிய இரண்டு உவமைக் கதைகளைக் குறிப்பிடுக.**

**(ii) இவ்வுவமைகளுக்கூடாக செல்வம் பற்றி வெளிக்கொணரப்படும் இயேசுவானவரின் மூன்று சிந்தனைகளைக் குறிப்பிடுக.**

**(iii) ஏழ்மையில் வாழும் ஒரு சிறுவன் அவனது ஏழ்மை நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கு நீர் செய்யக்கூடிய ஐந்து செயல்களைக் குறிப்பிடுக.**

***விடை:***

(i)
- செல்வரும் இலாசருவும் பற்றிய உவமை
- அறிவற்ற செல்வன் பற்றிய உவமை

(ii)
- லௌகீக செல்வம் நிலையற்றது என்பது
- செல்வத்தைப் பகிர்ந்து கொள்வது அவசியம் என்பது
- செல்வம் தீமையை ஏற்படுத்தும் என்பது
- செல்வம் இறையரசுக்கு செல்வதற்கு தடையாகக் காணப்படுகிறது.

(iii) - பணத்தின் மூலம் உதவுதல்
- தனது அறிவையும், திறமையையும் பயன்படுத்தி அவனுக்கு உதவி செய்தல்.
- அச் சிறுவனிடம் காணப்படும் விசேட தன்மைகளை அறிந்து செயல்படுதல்.
- அச் சிறுவனின் குடும்பத்தினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு கிறிஸ்தவ நிறுவனங்கள், ஆலயங்கள் மூலமாக வழி செய்தல்
- கல்வித் துறையில் உதவியளித்து எதிர்காலத்தை சிறப்புறச் செய்தல்

**(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)**

07. **தரப்பட்டுள்ளவற்றில் இரு தலைப்புக்களைத் தெரிவு செய்து, திருமறையில் காணும் உதாரணங்களுடன் சிறுகுறிப்பெழுதுக.**

**(i) செபம்**

கிறிஸ்தவர்களுக்கு செபம் ஒரு ஆயுதமாகும். கடவுளோடு தொடர்பு கொள்வதற்கு முக்கியமான வழியாகும். சோதனைகளில் விழாதபடி வழிகாட்டி, இறைவிருப்பத்தை நாடி அதில் கவனம் செலுத்த உதவுகிறது. உதாரணம் : கெத்சமனே செபம், கர்த்தர் கற்பித்த செபம். இதன் மூலம் வெளிப்படும் விசேட பண்புகள் அனுதின தேவைகளுக்கான மன்றாடுதல், எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோரை மன்னிப்பது பொல எங்கள் குற்றங்களுக்கு மன்னிப்பு வேண்டுதல். தூய ஆவியின் வழிநடத்துதலில் பெலனடைதல். இயேசு செபித்த உதாரணங்கள் : பணியை ஆரம்பிக்கும் முன் நாற்பது நாட்கள் உபவாச செபம், சீடர்களைத் தெரிவு செய்யும் முன் ஒரு நாள் இரவு செபம்.

**(ii) நன்றி செலுத்தல்**

அனுதின செபத்தில் கடவுளிடம் இருந்து பெற்ற அனைத்து நன்மைகளுக்கும் நன்றி கூறுதல். செபத்திற்கு கிடைத்த பதில்களுக்காக நன்றி கூறுதல், கிறிஸ்தவர்களாக நாம் அனைவருக்காகவும் நன்றி கூறுதல், அனுதினமும் எம்மைப் பாதுகாத்து வழிநடத்துவதற்காக நன்றி கூறுதல். உதாரணம்: பத்து தொழுநோயாளரில் ஒருவர் சுகம் பெற்றமைக்காக நன்றி செலுத்துதல்.

**(iii) ஆதித் திருச்சபை இன்றைய திருச்சபைக்கு வழங்கும் வழிநடத்தல்**

ஆதித் திருச்சபையின் பொது விசேட பண்புகள்: ஒற்றுமை, பகிர்ந்து கொள்ளுதல், ஜெபித்தல், பிறரின் தேவைகளில் கவனம் செலுத்துதல், இறைவார்த்தையைப் போதித்தல், அப்பம் பிட்டல், சகோதர உணர்வோடு திருவிருந்தில் பங்கு பெறுதல், எல்லா உடமைகளையும் பொதுவாக வைத்திருத்தல், அனைத்துக் காரியங்களையும் ஜெபத்தோடும் தூய ஆவியின் வழிகாட்டுதலோடும் தீர்த்து விசுவாசத்தோடு ஒன்றிணைதல்.

**(iv) இறைவாக்குப் பணியின் முக்கியத்துவம்**

இறைவாக்கின் மூலம் வெளிப்பட்ட உண்மைகள், இயேசுவின் வருகை, அவரின் வழியை ஆயத்தம் செய்தல் என்பவைகளை மலாக்கியும் எசாயாவும் முன்வைத்தனர். இயேசுவின் பாடு, மரணம், உயிர்ப்பு யாவையும் பற்றி எசாயா முன்வைத்தார். மீக்கா சமாதான குமாரன் பற்றியும், ஆமோஸ் சமுதாய நீதி நியாயங்களையும், எசாயா கடவுளின் தூய்மையையும் பற்றிக் கூறினார்கள்.இவ்வாறு இறைவாக்கினர் மூலமாக அன்றைய இஸ்ரயேல் சமூகம் மனம் திரும்புவதற்கான அழைப்பு மூலம் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு பொருந்துமாறு கிறிஸ்தவ சமூகத்துக்கு விடுக்கும் சவாலாக இறைவாக்குப் பணி அமைந்தது.

**( 5 + 5 = 10 புள்ளிகள்)**